**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள இல்லவாசிகளுக்கு மழை மற்றும் குளிர் காலங்களில் பயன்படுத்த போர்வைகள் வாங்கி வழங்குதல் – அனுமதி அளித்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந-1)த் துறை**

அரசாணை (D) எண் 15

நாள்: 22.04.2022
சுபகிருது, சித்திரை– 9,
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 2249, உள் (சிறைகள்-இ) துறை, நாள் 08.10.1990
2. அரசாணை (டி) எண் 85, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-1)த் துறை, நாள் 14.11.2017.
3. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடித எண் 314/ம.இ.நி.3/2017, நாள் 02.06.2017 மற்றும் 22.08.2017.

-----

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாட்டில் உள்ள 10 தொழுநோய் அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகள் அனைவருக்கும் மழை காலத்தில் பயன்படுத்த போர்வைகள் மூன்றாண்டிற்கு ஒரு முறை வானவில் கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து பெற்று வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரக கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள 981 இல்லவாசிகளுக்கு ஒரு போர்வை ரூ.300/- வீதம் 981 போர்வைகள் கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனம் மூலம் வாங்கி வழங்குவதற்கு ரூ.2,94,300/- நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடிதத்தில், 2017-2018ஆம் நிதியாண்டில், மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை போர்வைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசித்த 981 இல்லவாசிகளுக்கு, 981 போர்வைகள் வழங்கியது போல், தற்போது வசிக்கும் 667 இல்லவாசிகளுக்கு (ஆண்கள் 308, பெண்கள் 329, குழந்தைகள் 30 உள்பட), கோப்-ஆப்-டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளியில் குறிப்பிட்டுள்ளவாறு ஒரு போர்வை ரூ.370/- விலையில் 667 எண்ணிக்கையிலான போர்வைகள் வாங்கி வழங்குவதற்கு ரூ.2,07,304/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஏழாயிரத்து முன்னூற்று நான்கு மட்டும்) தேவைப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

(த.பி.பா.)

4. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை ஏற்று, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசிக்கும் இல்லவாசிகளுக்கு போர்வைகள் வழங்கப்பட்டு 3 ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில், அவ்வில்லங்களில் வசிக்கும் குழந்தைகள் மற்றும் வயதானவர்களின் நலனை கருத்தில் கொண்டு, வரும் மழை மற்றும் குளிர் காலங்களில் தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு ஏதுவாக 667 இல்லவாசிகளுக்கு ஒரு போர்வை ரூ.370/- வீதம் வாங்கி வழங்கிட தேவைப்படும் செலவினத் தொகையான ரூ.2,07,304/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து ஏழாயிரத்து முன்னூற்று நான்கு மட்டும்) செலவுகள் மேற்கொள்ள அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி-4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235-சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02-சமூக நலன் - 104- முதியோர் இயலாமையுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன்-I – மாநிலச் செலவினங்கள் – AI – தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு இல்லம்-46 – உடைகள், கூடாரச் செலவுகள், பண்டகசாலைப் பொருள்கள்.

(த.தொ.கு.2235-02-104-AI -4609).

6. மேலே, பத்தி-4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண் 16198/நிதி(சந)/2022, நாள் 14.04.2022-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆர். லால்வேனா,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்

மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிக்ள் நல அலுவலர்கள்,
(மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5. வழியாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.

<u>நகல்</u>:
செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை-9.
நிதித் (ச.ந/வ.செ.பொ.-I)துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

க.ஹரி கிருஷ்ணன்
(க.ஹரி கிருஷ்ணன்)
அரசு சார்புச் செயலாளர்

28/4/22